Dalit Dialogue Forum Series Dialogue - 2 : 2019

## ரெவரெண்ட்

# ஜான்ரத்தினம்

அன்பு பொன்னோவியம்



Published By

**DDF**

DALIT DIALOGUE FORUM

Chennai - Tamil Nadu - India - 2019

DDF Series Publicaction No.2 - 2019
Title : **Rev. John Ratnam (In Tamil)**
Author : **Anbu Ponnovian**
General Editor : **Gowthama Sanna**
© Copyright : **To the Author**
Pages : **23**
Published by : **DDF - Dalit Dialogue Forum, Chennai, TamilNadu, India, e-mail : contact2ddf@gmail.com**
Edition : **First - February 2019**
**Price Rs.10/-**

Dalit Dialogue Forum Series Dialogue - 2 : 2019

# ரெவரெண்ட்
# ஜான்ரத்தினம்

அறிஞர்.அன்பு பொன்னோவியம்
ஆசிரியர் - அறவுரை
Editor - Ambedkarite

Published By
DDF
DALIT DIALOGUE FORUM
Chennai - Tamil Nadu - India - 2019



**அறிஞர்.அன்பு பொன்னோவியம்**

முன்னோடி அறிஞர். தலித் தலைவர்கள் வரலாறு பற்றி இவர் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளே இன்றைய ஆய்வாளர்களுக்கு அடிப்படை சான்றுகளாக விளங்குகின்றன. ஒருவேளை இவர் மட்டும் அத்தலைவர்களின் வரலாறுகளை எழுதி வைக்காமல் போயிருந்தால் அத்தலைவர்கள் வரலாற்றின் பக்களிலிருந்தே துடைத்தெறியப்பட்டிருப்பார்கள். அன்பு பொன்னோவியம் அவர்கள் ரெட்டமலை சீனிவாசன், தர்மலிங்கம் பிள்ளை, டாக்டர்அம்பேத்கர், சிவராஜ், அன்னை மீனாம்பாள் உள்ளிட்ட தலைவர்களுடன் நேரடியாக பழகியவர். அறவுரை, அம்பேத்கரிஸ்ட் இதழ்களுக்கு ஆசிரியாராக இருந்தவர்.

# தலித் உரையாடல் அவை சுவடிகள்

## பதிப்பாசிரியர் குறிப்பு

தலித் உரையாடல் அவை தலித் மக்களின் வரலாறு, சமூகவியல், பொருளியல், கலை, பண்பாடு மற்றும் மதம் உள்ளிட்ட துறைகளில் விவாதங்களை உருவாக்கவும், சமுகத்தோடு தொடர்ந்து உரையாடல்களை மேற்கொள்ள உருவானது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் தலித்தியம் தொடர்பான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அறிவுஜீவிகளுடன் மேற்கொள்ளும் உரையாடல்களின் மூலம் பண்டிதர், அம்பேத்கர் உள்ளிட்ட அறிவாசான்களின் கருத்துக் களையும், தலித் மக்களிடையே தற்போது பணியாற்றி வரும் தலித் அறிவு ஜீவிகளின் கருத்துக்களையும் விவாதத் திற்கு உட்படுத்தி அவற்றை சர்வதேசத் தளத்தில் கொண்டு போய் சேர்க்க முனைகிறது. அதுமட்டுமின்றி பல ஆண்டுகளாக மறைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட தலித் முன்னோடிகளின் வரலாறுகளையும் அவர்தம் பணிகளையும் சிறு வெளியீடுகள் வாயிலாக பரவலாக்கும் பணியினையும் தொடங்கியுள்ளது. அதன்

தொடர்ச்சியாக DDFன் இரண்டாம் வெளியிடாக இந்த சுவடி வெளியாகிறது.

ரெவரெண்ட் டி.ஜான் ரத்தினம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு இந்த சுவடியினை அலங்கரிக்கிறது. இதை மறைந்த அறிஞர்.அன்பு பொன்னோவியம் அவர்கள் தாம் நடத்திய அறவுரை என்னும் இதழில் எழுதினார். மேலும் ஒரு மாத நாள்காட்டியின் அடி இணைப்பாக சேர்க்கப்பட்ட தாள் குறிப்பு இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்த குறிப்பினை எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இது குறித்து பொன்னோவியம் அவர்களிடம் அவர் உயிருடனிருந்த போது நான் கேட்டேன். அதை தாம்தான் வெளியிட்டதாக குறிப்பிட்டார். அதனால் இங்கு அது அவரது எழுத்தாகவே பதிக்கப்படுகிறது.

இந்த சுவடி தலித் வரலாற்றுத் தலைவர்களை அறிமுகப்படுத்தும் பெரும் பணியில் சிறு பங்களிப்பு. தலித் உரையாடல் அவையின் பணிகளில் தொடர்ந்து பங்கெடுக்கும் அனைவருக்கும் நன்றி.

*21.02.2019* இவண்

சென்னை *21* **கௌதம சன்னா**

பொது பதிப்பாசிரியர் . தஉஅ



Tamil Heritage Foundation - EBook

அறிஞர்.அன்பு பொன்னோவியம்

எழுதிய

# ரெவரெண்ட் ஜான் ரத்தினம்



Tamil Heritage Foundation - EBook

# ரெவரெண்ட்
# ஜான்ரத்தினம்

*சாதிப்பூசலுக்கு சாவு மணி அடித்திட அவதரித்த தூய தலைவர் டி. ஜான்ரத்தினம் என்று சொல்வதில் தவறேதும் இராது.*

*1885-இல்* **திராவிட பாண்டியன்** *என்ற தமிழ் வெளியீட்டைத் துவக்கி தமது திறமையான வாதங்களால் அதனை அந்த வெளியீட்டை தாழ்த்தப்பட்டோரின் போர்க்குரல் என்று எல்லோரும் எண்ணத்தக்க வகையில் சிறப்பாக நடத்தி வெற்றி கண்ட வேழம் டி.ஜான்ரத்தினம் அவர்கள்.*

*அன்றைய சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஓரணியில் திரளாமல் பல்வேறு பெயர்களால் அமைப்புகள் கண்டு ஒன்றுபடாமல் இயங்குவதால் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு நேரக்கூடிய தீங்குகளை எண்ணிப்பார்த்து 1892-இல்* **திராவிடர் கழகம்** *என்ற அமைப்பை துவக்கி, அதனை சமுதாயப் பணியில் ஈடுபடுத்தி, சமத்துவம்*

அறியாமல், தாழ்வு மனப்பான்மை கொண்டு தடுமாறும் மக்கள் தலை நிமிர்ந்து வாழவும், சமுதாயப் பணியின் மூலம் தன்மானம் காணவும் முதன் முதலில் கழகம் காண வித்திட்ட வித்தகர் டி. ஜான்ரத்தினம் ஆவார்.

ஜஸ்டிஸ் பார்ட்டியின் தலைவர் டி.எம். நாயர் 1911-இல் திராவிடர் சங்கம் துவக்கினார். அண்ணாதுரை அவர்கள் 1944 இல் சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் கண்டார். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக அல்லவா 1892 இல் திராவிடர் கழகம் கண்டு, சீரழிந்து சிந்திக்கும் திறனற்று, சிதறிக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை எல்லாம் ஓரணியில் திரட்டிட, அவர்கள் ஒன்றுபட்டு வாழ்த்திட நல்வழி காட்டும் நம்பிக்கை நட்சத்திரமாக நலிவுக்குள்ளான இந்த சமூகத்திற்கு விசுவாசத்துடன் - விவேகத்துடன் - சமுதாய நலனே தன் சொந்த நலன் எனக்கருதி தொண்டாற்றினார். தூய தலைவர் ஜான் ரத்தினம்.

அன்றைய அதிகாரத்தில் இருந்த பார்ப்பனக் கூட்டம் குறுகிய சாதிவெறி என்ற வர்ணம் பூசி தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண மறுத்து வந்தது. இதை எதிர்த்து மாகாண கவர்னர் அவர்களிடம் முறையிட்டு காரியத்தை முடிப்பதில் அவரே மிகச் சிறந்தவராவார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்காலம் வாழ்வும் - வளமும் நிறைந்ததாக இருந்திட வேண்டும் என்கிற



Tamil Heritage Foundation - EBook

பேரவா கொண்டவர் அவர். ஆகவேதான் கலைக் கல்வி, தொழிற்கல்வி ஆகியவைகளால் ஏற்படும் பொருளாதார முன்னேற்றமே நல்ல மாற்றமாக அமையும். அதுவே வருங்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை வாழவைக்கும் வளரவைக்கும் என்ற நம்பிக்கையோடு 1886-இல் ஒரு Model School அதாவது மாதிரி பள்ளியை நிறுவினார். அது நல்ல பயனும் பலனும் அளித்தது கண்டு 1892-இல் ஆண்-பெண் இருபாலரும் படித்து முன்னுக்கு வர சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பெரியதொரு கல்விக் கூடத்தை அமைத்து அதற்கு தானே தலைமை ஆசிரியராக இருந்து அரிய பணியாற்றினார்.

சென்னை மக்கிமாநகர், தேனாம்பேட்டை போன்ற பகுதிகளில் பள்ளிகளை தொடங்கினார். இவையெல்லாமல் சித்திரம், தச்சுவேலை, தையல்வேலை போன்றவைகளை கற்கும் தொழிற்கல்விக்கூடம் ஒன்றையும், மாணவர் விடுதியையும் 1889-இல் தோற்றுவித்தார்.

ஜான்ரத்தினம் கிறிஸ்தவர். அவர் 1877-இல் மதகுருவானார். அதாவது ரெவரெண்ட் ஆனார். அவர் மத குருவானாலும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் எப்பொழுதும் போல் அன்பும்-பண்பும் கெடாதபடி இனிமையும் - இதமும் உள்ளவராக செயல்பட்டு வந்தார். இத்தகு செயல்களால் கவரப்பட்ட பலர் தாங்களாகவே கிறிஸ்துவ மதத்தை தழுவலானார்கள். 1887லிருந்து மாகான கௌரவ நீதிபதியாக தொண்டாற்றினார். மிக

நல்லவர். நீதி தவறாதவர் என எல்லா சமூகத்தினர்களும் பாராட்டும் வகையில் தன் பதவிக்கு சிறப்பு சூட்டினார். உண்மையும், ஒழுக்கமும், அப்பழுக்கற்ற தன்மையும் ஒருங்கே நிரம்பியவராக இருந்தார் அவர்.

தலைவர் டி.ஜான்ரத்தினம் அவர்களால் குடியிருக்க நிலம் பெற்றோர் ஏராளம். சென்னை ஆல்தோட்டம், மக்கிமாநகர், துலுக்கன் தோட்டம், ஆயிரம் விளக்கு, ரங்கோன் தெருவு, அமிர் தோட்டம், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, மைலாப்பூர், சேத்துப்பட்டு, நுங்கம் பாக்கம் போன்ற பகுதிகளில் நிலம் பெற்றவர்கள் இருந்தார்கள். பத்திர பதிவு *Collector Certifcate*ஆக பதிவு செய்யப்பட்டது.

ஜான்ரத்தினம் அவர்கள் பழங்குடி தாழ்த்தப்பட்ட மக்களை எல்லாம் ஓரணியில் திரட்ட இணைப்பாலமாக '**கூடுமிடம்**' ஒன்றை சுமார் நூறு ஏக்கர் நிலத்தில், சமூகக் கூடத்துடன் அமைக்க அக்கரையுடன் பாடுபட்டார். மாகாண கவர்னரின் ஒப்புதலும் பெற்றார். கைகூடும் நிலையில் மதப்பிரச்சினைகள் தலைகாட்டின. அந்த மதம் - இந்த மதம் என்கிற அளவு பேதம் வலுவடைந்து போராட்டமாக மாறி அது தடைபட்டு நின்றுவிட்டது. இது வருந்த வேண்டிய ஒன்று.

திருவிக. அவர்களின் ஆசிரியர்களில் பெரியவர் டி. ஜான் ரத்தினமும் ஒருவர். இதனை திரு.வி.க. அவர்களே பல கூட்டங்களின் வாயிலாகவும் ஏடுகள் மூலமாகவும்



Tamil Heritage Foundation - EBook

வெளிப்படுத்தி விளக்கமளித்திருக்கிறார். எங்கும், என்றும், எப்போதும் என் மக்களுக்காகப் பாடுபடுவேன் என்கிற தூய்மை உணர்வுடன் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குத் தொண்டாற்றிய அந்த அப்பழுக்கற்ற ஒப்பற்ற மாணிக்கம் 1942-இல் மறைந்தது.

2

> "நீர் போகம் இடத்திற்கு நானும் வருவேன். நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்... மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரிக்காது."

பரிசுத்த வேதாகமத்தின் ரூத் சரித்திரத்தில் உள்ள அந்த உயர்நீதியைப் புற ஜாதியாகிய வேமாவாபிய பெண்மணி ரூத் உலகத்திற்கு அறிவுறுத்திச் சென்றாள் சாதி மாறுபட்டாலும் தன் உணர்வையும், கடமையையும் தெளிவாக புரிந்துகொண்டு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவளது நேரிய நெறியை கடைபிடித்து வாழ்ந்தவர் நமது உயர் மதிப்புக்குரிய ரெவரெண்ட் டி.ஜான் ரத்தினம்!

கிறித்தவம் சாமி முறைகளை ஓரளவுக்கு மறைத்துவிட முயன்றது. கல்வி, வசதி, நாகரிகம் ஆகிய முறைகளால் தாழ்த்தப்பட்டோர்களுக்கு பெரிதும் பாடுபட முன் வந்த மிகக் குறைந்த சிலரில் முதல் வரிசையின் முதல்வராக தன்னை அர்ப்பணித்தவர் ரெவரெண்ட்

டி. ஜான் ரத்தினம் அவர்களாவார்கள்.

ரெவரெண்ட் அவர்கள் இருந்த இடத்தை மறக்காமலும் புகுந்த இடத்திற்கு மாசு ஏற்படுத்தாமலும் வாழ்ந்த பெருந்தகையாவார். அவர் "தாழ்த்தப்பட்டோர்" சென்ற இடந்தோறும் சென்றார். அவர்கள் தங்கிய இடங்களிலே தங்கினார். அவர்களை எப்போதும் தம் மக்களாகவே பாவித்தார். மரணத்தின் வாயிலிலே நுழைந்தபோதும் தாழ்த்தப்பட்டோர்களின் எதிர்கால வாழ்வையே எண்ணி ஏங்கினார். அப்பேரருளாளன் தாழ்த்தப்பட்டோர்களிடையே இருந்து விலகி வாழ விரும்பியிருந்தால் சீராக, செம்மையாக, மதிப்போடும், புகழோடும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இந்த பாழும் சமூகத்தை முன்னேற்ற முயன்ற அவரை நமது சமுதாயம் செல்லாக்காசாக்கிவிட்டது. ஏசு கூறிய "ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீன மடையான்" என்ற வாக்கியத்தை தாழ்த்தப்பட்டோர் இனம் ரெவரெண்ட் அவர்கள் தாழ்த்தப்பட்டோர்களின் குறைகளை எடுத்துக் கூற நடந்த பலநூறு கூட்டங்களுக்கு தலைமை வகித்தவர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கனன்று எழுந்து எழுச்சி வெள்ளத்தை உருவாக்கிய பலரில் முக்கியமானவர். தாழ்த்தப்பட்டோர்களுக்காக கல்வித் துறைகளிலும், தொழில் - அரசியல் ஆகியத் துறைகளிலும் முன்னேற பெரும்பாடுபட்டவர். பழங்குடி மக்களக்கென தனி பெரும் பள்ளியை துவக்கி தன் நேரிடைப் பார்வையிலே



Tamil Heritage Foundation - EBook

கண்காணித்து வளர்த்தவர். சுய நலமற்ற தியாக உள்ளத்தினர்.

பாழாய்ப் போன பழங்குடி இனம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மூன்று பிரிவுகளாக பிரிந்து நின்றது. இந்து மதத்தை பெரிதென நம்பி அதன் மூலமாக வாழ்ந்து விடலாம் என்று எண்ணிய வட்டம் ஒன்று இரண்டாவதாக கிறித்துவத்தில் தான் நாம் வளர முடியும் என்று நம்பியவர்கள். மன்றாவதாக பௌத்தம்தான் நம்முடைய புராதன மதம் என்று துணிந்து ஏற்ற குழுவினர். இவை மூன்றும் மதத் துறையிலே தங்களையும் தங்கள் சமூகத்தையும் முன்னேற்ற பெரும் பாடு பட்டார்கள். உண்மையான சுயநலமற்ற தியாகிகளாக அனைவரும் உழைத்தனர். பல இடுக்கண்களையும் ஏற்று தங்களையே அழித்துக் கொண்டு சமுதாயத்தையும் குழப்பிவிட்டார்கள். எனினும் அந்த உத்தமர்களின் நல் உழைப்பால் ஒவ்வோர் துறையிலும் பழங்குடி மக்கள் பெருத்த நன்மையே அடைந் தார்கள். இருப்பினும் ஒற்றுமையற்றிருந்தார்கள். மூன்று குழுக்களாக வெவ்வே றாக பிரிந்திராமல் அன்றே ஒன்றுபட்டிருந்தால் இன்று பழங்குடி மக்கள் நாடாள்வோர்களாக - வசதி பெற்றவர்களாக - இருந்திருப்பார்கள்.

அன்று பழங்குடி பெருமக்களில் ஒரு சிலரே மேடை மீது ஏறிக் கொள்கை விளக்கம் தரத் துணிந்து நின்றனர்.

சிலர் நேரிடையாக ஆதரவு தந்தனர். அப்படிப்பட்ட

வர்களில் முதன்மை பெற்றவர் உயர்திரு ஷாப்பு சுப்பிரமணியம் அவர்களாவார். அதனை மிகவும் பயன்படுத்திக் கொண்டவர் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தான். இவருக்கு தந்தை எம். சி. ராஜா உறுதுணையாக இருந்தார்.

ரெவரெண்ட் அவர்கள் கல்வியால் மட்டுமே பழங்குடி மக்கள் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை உடையவர். கல்வி பயின்றபின் கிடைக்கப்பெறும் ஊதியம் சிறிதாயினும் சிக்கனமாக வாழ்ந்தால் எல்லாத் துறைகளிலும் எளிதாக முன்னேறிவிட முடியும் என்பதை அவர் அடிக்கடி விளக்கினார். எனவே தான் கல்வி வசதிக்காக 1887 ஆம் ஆண்டில் **வெஸ்லியன் மிஷன்**[1] பள்ளியை ஆயிரம் விளக்குப் பகுதியில் தோற்றுவித்தார். அந்நாளில் பத்து மைல் சுற்றளவிலிருந்து மாணவர் வந்து குழுமிப் படிக்கும் பெரிதான முதல் கல்விக்கூடமாக அது இருந்தது. அப்பள்ளி பழங்குடி மக்களுக்கானது என்றாலும் எல்லா இன மாணவர்களுக்கும் படிக்கும் வாய்ப்பை பெருந்தன்மையாக அவர் செயல்படுத்தியது மிகமிகப் பெருமைக்குரிய செயலாகும்.

1890 இல் பொது மக்களின் நலனுக்காக மேடையேறினார். வெறும் "ரத்தின"மாக அவரால் ஒன்றும் செய்யக்கூடாத நிலையிருந்தது. சாதிக் கொடுமையின்

1.வெஸ்லியன் மிஷன் பள்ளி சென்னை ராயப்பேட்டை மணிகூண்டுக்கு அருகில் உள்ள பெரும்பள்ளி - ப ஆ

உச்சநிலை சமுதாய மக்களுக்கு எதையும் செய்யவிடாது என்ற முடிவக்குப் பிறகு "ஜான் ரத்தின"மானார் பழங்குடி மகனாயிருக்கும் முனிசாமி, யூசுப்பாகவும், ஜோசப்பாகவும் மாறிவிட்டால் - அத்துடன் கல்வியும், வசதியும் இருந்து விட்டால் அவரை எதிர்க்கும் துணிவு அன்றைய உயர்த்தப்பட்டோர்களுக்கு இல்லாமலிருந்தது. அத்துடன் வெள்ளையர்களின் உறவும் இருந்தால் மற்ற இன மக்களின் தொல்லைகளிலிருந்து கூட தப்பிவிட முடியும். அப்படிப்பட்ட நிலைமையை வளர்த்துக் கொண்டு மனித சமுதாயத்திற்கென்று தொண்டாற்றியர்வளை நாம் காணல் அரிது. ஆனால் அவ்வாறு உழைத்தவர் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள்தான் என்பதை நம்மால் அறுதியிட்டுக் கூற முடியும்.

உயர்திரு ஜான் ரத்தினம் அவர்கள் கிறித்தவர்தான். ஆனால் பழம்பெருங்குடி சமுதாயத்தைச் சார்ந்தவர், அவர் ஏசுவின் புனித நெறியைப் பின்பற்றினார். அதே நேரத்தில் வாழ்விழந்து, வசதியிழந்து, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தீண்டாதவராக கிடைந்த பழங்குடி மக்களுக்கு இரவு பகலாக அயராது தொண்டாற்றினார். மதத்துறையை விட்டாரில்லை. மக்கள் நலனைத் துறந்தாரில்லை. நாடு - தேச நலனுக்காக விளம்பரத்தை வேண்டி நிற்காமல் உழைத்த பண்பாளர் அவர். சுருங்க கூறினால் அவர் மனித சமுதாயத்திற்காக உழைத்தார் எனலாம். மக்கள் வளம்தான் நாட்டின் வளம் - தேசத்தின் வளம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அவர் தவறுகின்ற

கிறித்துவர்களை திருந்தினார். குதர்க்கம் பேசும் இந்துக்களுக்கு விளக்கம் தந்தார். குத்தலாக பேசிய இஸ்லாமியர்களை வாதத்துக்கழைத்தார். பௌத்தர்களைப் பாராட்டினார் எனினும் எல்லோரும் அவரை எதிர்க்கவே செய்தனர். அந்த எதிர்ப்பின் முன்னணியில் நின்றோர் தாழ்த்தப்பட்டோர் இனமே.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலுங்கூட அப்பெருந்தகை சலிப்படையவில்லை. "தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த பட்டணமும், எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது" என்ற ஏசுவின் வசனத்தையே அறிவுறுத்தி "நமக்குள்ளே ஒற்றுமையே வளர்ப்போம்" என்றே பழங்குடி மக்களுக்கென கட்டப்பட்ட திருச்சபைக்கும் செல்லவிடாமல் அவர்களை தங்களுடைய விவசாய பண்ணைக்கு முப நேரமும் பயமுறுத்தி பயன்படுத்தும் கொடுமையிலிறங்கினார். இது போன்றே மற்ற மாவட்டங்களிலும் சாதாரணமாக நடக்கத் தொடங்கிற்று. அப்படிப்பட்ட நேரங்களில் தமது "**திராவிட தூதன்**" பத்திரிகையில் அவ்வப்போது அருமையான விளக்கங்களையும் அறிவுரைகளையும் வெளியிட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் புனித பைபிளை நித்தம் நித்தம் படிப்போர் அன்று அதனை உணர மறுத்தார்கள்.

1914வரை அவர் பழங்குடி மக்களின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்துக் கொண்டிருந்தார். அரசியல் சூழ் நிலையால் ஒரு சில பெருங்குடி



Tamil Heritage Foundation - EBook

மக்கள் அதனைத் தவறாக புரிந்துகொண்டு தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு கிறித்தவராக தலைமைத் தாங்குவது என்ற பிரச்சினையை கிளப்பினர். அரசியல் குட்டையில் அகப்பட்டை எடுத்துக்கொள்ள காத்திருந்த அன்றைய பிற்போக்காளரின் இத்தகைய கீழ்மையான எண்ணத்திற்கு பயந்து அன்றிலிருந்து கூட்டங்களுக்கு தலைமை வகிப்பதை தவிர்த்தார். ஆனால் அத்தகைய பிற்போக்காளர் திரு. பாத்ரோ, திரு. நாயர், செட்டியார் போன்றவர்களை தங்கள் மாநாட்டிற்கு தலைவராக்கினர் என்னே! உயர்திரு ஜான் ரத்தினம் அவர்கள் அதற்காக வருந்தியதாகத் தெரியவில்லை. இருப்பினும் அந்நிகழ்ச்சி ஒன்றை நமக்கு நினைவு படுத்துகிறது. "எருசலமே தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன். எங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" என்ற ஏசுவின் புனிதப் பொன் மொழியை அன்று இவர் தமிழகத்தைப் போர்த்துக் கூறவில்லை எனினும் அவரின் உருகிய உள்ளம் எண்ணியிருக்குமன்றோ!

ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்களை நாம் புகழ்வதைக் காட்டிலும் பிறர் கூறக் கேட்டது பெருமையாகும். ஆகவே தமிழ் பெரியார் என தமிழகத்தால் புகழ்பெற்ற திரு.வி.க. அவர்களது உரையால்

கேட்போம்.

"அந்நாளில் ஆதி திராவிடர்க்கென்று மாகாணத்தில் அமைந்த பள்ளிகளில் ஆயிரம் விளக்குப் பள்ளியே சிறந்ததாயும். பெரியதாயும் விளங்கியது. அதன் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் எழுதப் புகுந்தால், அவை மட்டும் ஒரு தனி நூலாகும். கண்டிப்பு, தண்டிப்பு, அதிகாரம் முதலிய உருமற் போர்கள். ஆயிரம் விளக்குப் பள்ளியில் நடம் புரிதல் அருமை. அவை ஒரே வழி நடம்புரிய எழினும். ஆங்கு வீவற்றிருக்கும் - ரெவரெண்ட் ஜான்ரத்தினம் அன்புத் தெய்வத்தின் முன்னர் ஒடுங்கி ஒதுங்கும். வேலையைத் திறம்படி நடத்துவது அதிகாரமா அன்பா என்றால் ஆயிரம் விளக்குப் பள்ளி அன்பு என்றே பதில் கூறும். தலைமையாசிரியர் ஜான்ரத்தினம் பிள்ளையின் அன்பு. பள்ளியை நன் முறையில் வளர்ந்தது. அவர் பார்வையில் எதேனும் குறைகாணப் பட்டால் உடனே ஆசிரியர் கூட்டம் கூட்டுவர். ஜெபம் செய்வர். அவரது ஜெபமும் அன்புரையும் குறைபாட்டை ஒழிக்கும் பொறாமை, கோள் முதலியன அங்கே இடம் பெற்றதில்லை. தலைமை ஆசிரியர் அன்பு எங்களைப் பொறுப் புணர்ந்து நடக்கச் செய்யும். எங்கட்கு அப்பள்ளி கோயிலாகியது. அன்பு என்ன செய்யாது. அன்பு உயர்வு தாழ்வைக் கடந்த பணிக்கு உரியது என்னும் நுட்பம் ஆயிரம் விளக்குப் பள்ளியில் நன்கு விளங்கியது.



Tamil Heritage Foundation - EBook

ஆயிரம் விளக்குப் பகுதியில் நாடோறும் ஆதி திராவிடர்ப் பிள்ளைகளுடன் பழகும் பேறு எனக்குக் கிடைத்த தன்றோ? அதனால் யான் அடைந்ததென்னை? யானும் ஆதி திராவிடனாகிய பேற்றை அடைந்தேன். அதாவது யான் சாதியற்றவனானேன். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுதல் கூடாதென்று பேசி வந்தேன். எழுதி வந்தேன். அப்பேச்சையும், எழுத்தையும் செயலாக்கியது. ஆயிரம் விளக்குப் பள்ளி காட்டியது. ஜான் ரத்தினத்தின் கூட்டுறவு எனது மதவெறியின் வேரைக் கவ்வியது. தொண்டின் திறத்தை ஜான் ரத்தினத்தின் வாழ்க்கை எனக்கு அறிவுறுத்தியது. ஆயிரம் விளக்குப் பள்ளி பைபிளின் பொருளை என்னுள்ளத்தில் விதைத்தது. அவ்விதை யான் ஒரு பெருஞ் செல்வம் பெறத் துணை நின்றது. என்ன செல்வம்? கிறிஸ்துவச் செல்வம். அதுவே அந்தணச் செல்வம். அப்பள்ளி என் வாழ்க்கைக்கென்றே தோன்றிது போலும்!... ஆயிரம் விளக்குப் பள்ளி என்றால் ஜான் ரத்தினம் பிள்ளை தானே.

ஜான் ரத்தினம் பிறர் குற்றம் பாராட்டாமை. மூர்க்கரை மனமார நேசித்துப் பண்படுத்தல். அன்பார்ந்த ஜெபம் முதலியன என்னுள்ளத்திலிருந்த பலவிதக் கரடுமுரடுகளை ஒருவாறு போக்கி வந்தன என்று அறிக்கை செய்கிறேன். ஆயிரம் விளக்குப் பள்ளி வாழ்க்கையும், தியோசாபிகல் சங்க அறிஞர் போதனையும் பிறவும் எனது மனோ நிலையை

மாற்றின.

கமலாம்பிக்கை எனக்கு வாய்த்தாள் திருமணம் நடந்தது. தேவாரம் முழங்கியது. கிறிஸ்து ஜெபமும் நிகழ்ந்தது. அங்கே சிறப்பு முதல் முதல் அடியர்க்கே அளிக்கப் பட்டது. ஆயிரம் விளக்குப் பள்ளித் தலைமை ஆசிரியரும் என்னுயிரியில் நேயரு மாகிய ஜான்ரத்தினம் எழுந்தார். வெள்ளிச் செம்பொன்றை கொடுத்தார். அத்தமிழ் மலர் மணத்தை யான் நுகர்ந்து கொண்டே பக்கத்திலிருந்த மணமகளை நோக்காமல் நோக்கினேன். அவள் பூரிப்புப் புலனாயிற்று. ஜான் ரத்தினம் இறுதியில் நிகழ்த்திய ஜெபம் அமிழ்தமாகியது.

வெஸ்லியன் மிஷனால் நான் பெற்ற நலங்கள் பல. அவைகளுள் சிறந்த ஒன்று. கிறிஸ்துவச் செல்வமெனும் அந்தணச் செல்வம். அச்செல்வ விதை முதல் முதல் என் உள்ளத்தில் விழுமாறு துணை செய்தது ஒருவரது நேசம். அவர் யார்? அவர் **ஜான் ரத்தினம் பிள்ளை.** அவர்க்கு யான் என்றும் கடமைப்பட்டவன். எனது வணக்கம் அவர்க்கு உரியவாக.”

இவ்வாறு உயரிய பண்பாளரான ஜான் ரத்தினம் அவர் களை அன்றைய மாற்று சமூகத்தினரும். மதத்தினரும் புகழ்ந்தனர். ஆனால் தமது இனத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டோர் அப்பேரருளாளன். எனினும் அவர் தொடர்ந்து பணியாற்றியமைக்கு நாம் தலைதாழ்ந்தி



Tamil Heritage Foundation - EBook

வணங்குவதற்கு கடமைப் பட்டவர்களாவோம்.

இறுதியாக, அவர் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். இவ்வுப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமக்கப்படும்? வெளியே கோட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்கும் உதவாது. உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள். ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயும் இருங்கள்" என்ற ஏசுவின் வசனத்தையேக் கூறி எச்சரித்தார். இருப்பினும் அன்று ஏற்றமா? இன்று ஏற்கிறோமா? இனியாவது ஏற்போமா?

உயர்திரு. ஜான் ரத்தினம் போன்ற நமது வழிகாட்டிகளின் தொண்டுகளையும், நமக்காக அவர்கள் வகுத்துக் காட்டிய வழிகளையும் நினைவுபடுத்திக் கொண்டு ஒன்றுபடுவோம்!

**அறவுரை மாத இதழ்**